முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

S.C.No.189/2023

LW-11, (PW -6)

| | | | |
|---|---|---|---|
| பெயர்; | சிவானந்தகுமார் | மதம் | |
| த.பெ. | வேணுகோபால் | தொழில் | |
| ஊர் | காணை | வயது | 58 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 13/02/2026 |

இன்று (13.2.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை குவிமுச 317 மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் தற்போது காணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன் நான் 3.1.2012ம் ஆண்டு வளவனூா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது நிலைய பொறுப்பு அலுவலராக இருந்தபோது கண்ணாயிரம் வயது 55 தகப்பானர் பெயர் அப்பாதுரை நெ. 414 கணபதி நகர் விழுப்புரம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று வளவனூர் காவல் நிலைய குற்ற எண். 21/2012 பிரிவு 392, இதச படி 3.1.2012ம் தேதி 22 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். வழக்கு பதிந்தத பிறகு அசல் முதல் தகவல் அறிக்கையை புகார் மனுவுடன் விழுப்பும் நீதித்துறை நடுவர் எண் 2 முன்பாக சமர்ப்பித்தேன் வழக்கு கோப்பினை ஆய்வாளரின் பார்வைக்கு மேல் நடவடிக்கைக்காக வைக்கப்பட்டது. கண்ணாயிரம் என்பவர் கொடுத்த புகார் **அ.த.சா.ஆ10** முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ11**.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

புகாரில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் வளவனூர் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 4 முதல் 5 கி. மீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பிரதான போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் உ்ள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்த காவல் நிலையத்திற்கு அதிக பட்சமாக 30 நிமிடத்தில் வந்துவிட முடியும் என்றால் சரிதான். புகார்தாரர் சுமார் 4 மணி நேரம் காலதாமதமாக காவல் நிலையம் வந்து புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். புகார் பெறப்பட்டதாக நான் இடைச் செறுகலாகத்தான் 22 மணி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் கவனக்குறைவாக பின்னிட்டு எழுதப்பட்டது. புகாரில் புகார்தாரர் தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல 3.1.2012 என்று தேதி குறிப்பிட்டுள்ளார் புகாரின் தலைப்பில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகாரில் நான் மேலோப்பம் செய்தபோது 379 என சட்டப்பிரிவு குறிக்கப்பட்டு பின்னிட்டு அதில் 392 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையிலும் 392 என்ற பிரிவு எழுதியபோது 2 திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. முதல் தகவல் கிடைக்கப்பட்ட நேரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். புகார் சம்மந்தமாக நான் பொது நாட்குறிப்பில பதிந்துள்ளேனா என்றால் பதிந்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை வரிசை 3 (சி)யில் அது பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் அவருடைய புகாரில் அவர் சந்தைக்கு சென்று வந்தபோது கொண்டங்கி என்ற ஊரை சேர்ந்த தண்டபாணி மற்றும் 4 நபர்கள் "நீ வெளியே வாடா உன்னை பார்த்துக்கொள்கிறேன்" என்று

மிரட்டி விட்டு சென்றதாக புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வழக்கின் எதிரிகள் பெயரை குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் புகாரில் நகையின் அடையாளம் மற்றும் பணத்தின் விவரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் கண்ணாயிரம் என்பவர் தன்னை சந்தையில் மிர்ட்டியதாக சொல்லப்படும் தண்டபாணியை பழிவாங்கும் நோக்கி பொய்யான சங்கதிகளை கொண்டு கொடுத்த புகாரினை நான் பெற்று'கொண்டு முகாந்திரம் இல்லாத வழக்கில் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல .

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/- A. Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge,

Villupuram